**தலைப்பு 275 – பொலன்னறுவை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 275 - பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

பெலன்னறுவை மாட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

2018 தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க மற்றும் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2216/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அரசாங்க காணிகளில் கனியப் பொருட்களை சேகரிக்கும் கட்டணமாக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய பணம் ரூபா 139,553,409 ஆகும். | இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனைகள் கேட்கப்பட்டுள்ளன. | 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க மற்றும் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2216/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி<br><br>ரூபா | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுடன் இணங்காமை<br>------------------------ | | | | |
| XXIV அத்தியாயத்தின் 4.4, 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகள் | 2,103,613 | ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட 11 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,103,613 ஆக இருந்ததுடன். அக்கடன் மீதியை அறவிடுவதற்கு 2022 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையுடன் இணங்காமை | | | | |
| நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 308,795,923 | 02 ஆண்டுகள் காலத்தை மிகைத்த ரூபா 308,795,923 பெறுமதியான 292 பொதுவைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட | பொருத்தமான வகையில் தீர்த்து வைப்பதற்கும் அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 44,377,180 பெறுமதியான வைப்புக்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது. | | |
| (இ) | சுற்றறிக்கை எற்பாடுகள்,பிரமாணங்கள் அல்லது வழிகாட்டியுடன் இணங்காமை --------------------- | | | |
| (i) | சுற்றாடல் அமைச்சின் - 01/2021 ஆம் இலக்க மற்றும் 2021 சனவரி 02 ஆந் திகதிய சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தினால் கிராமிய சுற்றாடல் குழு மற்றும் பிராந்திய குழு செயற்படுத்தப்படவில்லை. | ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கிராமிய மற்றும் பிராந்திய சுற்றாடல் குழுவினை உருவாக்கி செயற்திறனாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என திம்புலாகல, வெலிகந்த தமன்கடுவ ஆகிய பிரதேச செயலகங்களினால் தெரிவிக்கப்பட்டது. | கிராமிய சுற்றாடல் குழுவினையும் பிராந்திய குழுவினையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடிதன்மையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | எலஹெர சமூர்த்தி வங்கியின் 05 உத்தியோகத்தர்களினால் பணத்தை மோசடி செய்து தாபன விதிக்கோவையின் முதலாவது துணைப்பதிவேட்டில் உள்ளடக்கிய தவறு இடம் பெற்றிருந்தது என | அந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியுள்ள பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான | உரிய பணத்தை அறவீடு செய்வதற்கும் உரிய நிதி மோசடியினை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து இன்னும் அறவிட வேண்டிய பணம் ரூபா 405,518 ஆகும். | நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | சம்பந்தமாகவும் தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திம்புகல பிரதேச செயலகத்தில் 2018 யூன் 11 ஆந் திகதியிலிருந்து 2021 மே வரையான காலத்தில் முதியோர் படிகள் மற்றும் சிறுநீரக படிகளைச் செலுத்தும் போது இடம்பெற்ற ரூபா 2,443,600 நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களிடமிருந்து அப்பணம் அறவீடு செய்யப்பட்டிருந்தும் தாபன விதிக் கோவையின் II ஆவது தொகுதியின் XLVIII ஆவது அத்தியாயத்தின் முதலாவது பட்டோலையின் கீழுள்ளதான ஒரு பிழை இடம்பெற்றிருந்தும் அது தொடர்பாக ஒழுக்காற்று ரீதியான விசாரணை அறிக்கை சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தினால் பிபிதெமு பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஆனந்த மகளிர் தேசிய பாடசாலையில் நீச்சல் தடாகத்தினை நிர்மாணித்தல் கட்டம் 2 இன் கீழ் தொடக்க | நிதி ஏற்பாடு இல்லாததன் அடிப்படையில் விலைப்பட்டியல்களுக்காக பணம் செலுத்தப்படாததுடன் இச்செயற்திட்டத்திற்காக எதிர்காலத்தில் எதுவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுவதில்லை. | தொடக்க மதிப்பீட்டிற்குப் புறம்பாக நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் |

| | | |
|---|---|---|
| உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,911,185 நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்திருந்தும் தொடக்க மதிப்பீட்டிற்குப் புறம்பாக அங்கீகாரமின்றி ரூபா 1,677,756 தொகையான வேலைப் பகுதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட வேலைகளில் ரூபா 644,338 பெறுமதியான வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. | | செயற்திட்டத்தின் தொடக்க குறிக்கோள் நிறைவேற்றப்படும் வகையில் அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் கால்நடை வளர்ப்புச் செயற்திட்டத்திற்காக ஒரு மாதம் வயதான கோழிக் குஞ்சிகளை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 04 பிரதேச செயலகப் பிரிவுகளின் 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு வழங்கிய 22,980 கோழிக் குஞ்சுகளுக்கு மத்தியில் 18,141 கோழிக் குஞ்சுகள் அதாவது 79 சதவீதமானவை மரணமடைந்துள்ளதனால் அதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 7,357,027 பணம் விளைவற்றதாக மாறியிருந்தது. | முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான விசாரணைகளை மேற்கொண்டு ஒழுங்கீனம் இடம்பெற்றதா என்பதனை பரீட்சித்து மீண்டும் இடம்பெறாமைக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) திம்புலாகல பிரதேச அதிகாரப் பிரதேசத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 1,970,000 கிரயமான பழைய சந்தை சந்தியில் விஜயபுர கடைக்கு அருகாமையிலிருந்து எப்சீ கால்வாய் வரையான வீதி நிர்மாணிப்பு செயற்திட்டம் 2021 திசெம்பர் 28 ஆந் திகதியளவில் வேலையை பூர்த்திசெய்யப்பட வேண்டியதாகக் காணப்பட்ட | மிகுதி வேலையைப் பூர்த்தி செய்தலானது உடன்படிக்கை செய்த அமைப்பினால் தவறவிடப்பட்டிருந்ததனால் அந்த அமைப்பினை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுனின்றது. இந்த வீதியானது திம்புலாகல பிரதேச சபையின் நிதி | செயற்பாட்டைச் செய்யத் தவறிய ஒப்பந்தக்காரர் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயற்திட்டத்தின் மிகுதி வேலையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 1,470,209 தொகையான வேலைகள் நிறைவேற்றப்படாது செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | ஏற்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் வேலைகளை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | கிராமிய வீதி மற்றும் எஞ்சியுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் தழிம்புலாகல பிரதேச செயலகத்தினால் இடைச் செருகல் கல்லை பரப்பி வீதியினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 11,000,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த 06 செயற்திட்டங்கள் உடன்படிக்கை செய்யப்பட்டவாறு 2021 திசெம்பர் 28 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகக் காணப்பட்ட போதிலும் ரூபா 10,420,082 தொகையான வேலைகள் நிறைவேற்றப்படாது செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டினை பல தடவைகள் திருத்தியமை மற்றும் நிர்மாணப் பொருட்களின் விலைகள் அதிகரித்தல் இதற்கு காரணமாக இருந்தது. | செயற்திட்டத்தைச் செய்யத்தவறிய ஒப்பந்தக்காரர்கள் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயற்திட்டத்தின் மிகுதிச் செலவுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஹிங்குரங்கொட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் விஜயராஜவெவ பன்சார்ந்த உற்பத்திப் பொருள் கிராம செயற்திட்டத்திற்கு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 4,105,000 செலவு செய்யப்பட்டிருந்தும் குறிக்கோளிட்ட செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மின்சாரம் மஙற்றும் நீர் இல்லாததனால் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்முடியாதுள்ளது. | சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு உரிய தரப்பினர்களுடன் உடன்படிக்கை செய்து செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் வேண்டும். |

**3.3 செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிருவாகக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் இரண்டாம் கட்ட செயற்திட்டத்தினை நிறைவேற்றும் காலம் மற்றும் தொடக்க கிரயத்தை குறைத்துக்கொள்ளல் ஆகிய விடயங்களை குறிப்பிட்டு தொடக்க ஒப்பந்தக்காரருக்கே வழங்கப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கை செய்தகிரயம் | நாடு முகங்கொடுத்துள்ள தொற்றுநோய் நிலைமை மற்றும் பாதகமான நிதி நிலைமை இதற்கு காரணமாக உள்ளது. | பொறுப்புக்களை செலத்தத் தவறிய தரப்பினர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்தி |

| | | |
|---|---|---|
| ரூபா 952,900,012 ஆன இரண்டாவது கட்டம் 2019 மே 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை 04 ஆண்டுகள் கடந்திருந்தும் உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பொலன்னறுவை மாவட்டத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தில் 11 சங்கங்களும் இரண்டாவது கட்டத்தில் 45 சங்கங்களும் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,685,474 மொத்த தொகை உரிய வங்கி கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டது. | கணக்குகளில் கணப்படும் பணத்தை பிரதேச செயலகங்களினால் பொறுப்பேற்பதற்கு அல்லது செயற்படும் மட்ட்த்திற்கு கொண்டு வரக்கூடிய சங்கங்களில் பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சங்கங்களை செயற்படும் மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பணத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) 04 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களின் 74 கெமீதிரிய மக்கள் கம்பனிகளில் 49 கம்பனிகள் செயற்பாடற்றவை என தகவல்கள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அக்கம்பனிகளின் வங்கி கணக்குகளில் ரூபா 24,728,866 பணம் விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்பாடற்ற சங்கங்களின் நிதியை செயற்பாடுள்ள சங்கங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது. | சங்கங்களை செயற்படும் மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தேவையான தகவல்களை நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும். |
| (இ) பிரதேச செயலகங்களினூடாக 2019/20 பெரும்போகம், 2020 சிறுபோகம் 2020/21 பெரும்போகம், 2021 சிறுபோகத்திற்காக அரிசி ஆலை உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட நெல்லுக்காக அரசாங்கத்திற்கு | நிலுவைப் பணம் அறவிடப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய அரிசி இருப்பினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படாத அரசி இருப்பு 3,774,827 கிலோகிராம் என சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக அறவிட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 263,863,180 ஆகும். | | |
| (ஈ) | மாவட்ட செயலகத்தின் நிருவாகக் கட்டடிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கட்டம் III இன் திட்டத்தை மாற்றுவதற்கான காரணத்தை குறிப்பிடாது மாவட்ட செயலகத்தின் வேண்டுதலின் அடிப்படையில் ரூபா 7,755,930 தொகையான மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | திட்டத்தினை மாற்றுவதற்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை என ஆலோசனைக் கம்பனியால் தெரிவிக்கப்பட்டது. | நியாயமான காரணத்தின் அடிப்படையில் திட்டங்களை திருத்தம் செய்தல் வேண்டும். |
| (உ) | தேசி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பொலன்னறுவை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 1983 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 17 உத்தியோகபூர்வ இல்லங்களின் மூலதனப் பெறுமதியை 60 ஆண்டுகளில் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளருக்கு அந்த வீடுகள் உரிமையாகும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட 07 வீடுகள் (வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம்) 2021 யூன் மாதமளவில் மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 215,226 தொகையான வீட்டு வாடகை செலுத்தி முடிவடைந்திருந்தும் மாவட்ட செயலகத்தினால் அந்த வீடுகளைப் பொறுப்பேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சிக்கல் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக அரசாங்க அதிபர்கள் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. | வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு மிகையாகச் செலுத்திய பணத்தை அறவீடு செய்வதற்கும் உரிமையைப் பொறுப்பேற்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் மூன்றாம் மட்டத்தின் பதவியினர் வெற்றிடம் 12 ஆகவும் இரண்டாம் மட்டத்தின் வெற்றிடம் 147 ஆகவும் ஆரம்ப மட்டத்தின் வெற்றிடம் 06 ஆகவும் காணப்பட்டது. | உள்நாட்டு அலுவலல்கள் அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பொருத்த்மான வகையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |